மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

# இரண்டாம் தவணைப் பரீட்சை -2023

வரலாறு - II

**தரம் - 10** | 33 | T | II | மூன்றுமணித்தியாலம்

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

அறிவுறுத்தல் :

- ❖ **பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **பகுதி II இல் 2 தொடக்கம் 7 வரையான வினாக்களில் ஐந்து வினாக்களை தெரிவு செய்து விடை எழுதுக.**
- ❖ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

1. (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
நாகதீப, கம்பளை, கிரிந்தி ஓயா, தெதுறு ஓயா, பொலன்னறுவை, நீர்கொழும்பு, மாந்தை, கலாவாவி, லங்கத்துறை, கண்டி, குருளுவாவி, மாகம

(12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள ஒரு பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
ரோம், போர்த்துக்கல், பாக்கு நீரிணை,
செங்கடல், கள்ளிக்கோட்டை, பத்தேவியா (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - அநுராதகம என்ற கிராமத்தை நகரமாக மாற்றியமைத்த மன்னன்

B - பத்தினி தெய்வ கோயில் திறப்பு விழாவிற்காக தென்னிந்தியாவின் சேர இராச்சியத்திற்குச் சென்ற மன்னன்

C - கலிங்க நாட்டு இளவரசி திரிலோக சுந்தரியை திருமணம் செய்த பொலன்னறுவை ஆட்சியாளன்

D - ஹோப்பிட்டிகம கல்வெட்டினைப் பொறிப்பித்த மன்னன்?

(04 புள்ளிகள்)

➢ A, B என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(A)




(ii) 1. படம் A இனைப் பெயரிடுக.

2. இது காணப்படும் பராதன இராசதானியின் பெயர்

3. இக் கட்டடக் கலையுடன் தொடர்புடைய சமயம் எது?

4. இதனை அமைத்தவர்கள் யார்? (04 புள்ளிகள்)

(B)



(iii) 1. படம் B இனைப் பெயரிடுக.

2. இதன் சிதைவுகள் கண்டுபிக்கப்பட்ட பிரதேசம் எது?

3. இதன் பயன்பாடு யாது?

4. இதனை இயக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட இயற்கை சக்தி யாது? (04 புள்ளிகள்)

## பகுதி - II

2. (i) கீழே A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ள காவிய வகைக்குரிய நூல்கள் ஒன்று வீதம் தருக.

A - தூது காவியம்

B - புகழ் காவியம்

C - போர்க் காவியம் (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றை அறிந்து கொள்வதற்காக இலக்கிய மூலதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(iii) புராதன கால சிதைவுகளின் மூலம் நாம் அறிந்து கொள்ளக் கூடிய விடயங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்றைக் கற்பதனால் ஏற்படும் பயன்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.(06 புள்ளிகள்)

3. (i) இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த

A - மலைநாட்டு வெட்டவெளி வாழிடங்கள் இரண்டு

B - தாழ்நில உலர்வலயக் குகைகள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

(iii) ஆரம்ப வரலாற்றக் கால குடியிருப்பின் கட்டமைப்பின் தன்மையை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) கீழே A, B, C எனத் தரப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களைத் தருக.

A - இல்லத் தலைவன்

B - கிராமத் தலைவன்

C - குளத்தொகுதியை நிர்வகித்தவர் *(03 புள்ளிகள்)*

(ii) கமிகவின் பணிகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

(iii) மக்களுக்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) புராதன காலத்தில் இலங்கையில் வளர்ச்சியடைந்திருந்த மூன்று கைத்தொழில்களை குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

5. (i) பின்வரும் வரலாற்று மூலாதாரங்களில் சேனைப் பயிர்ச் செய்கைக்கு வழங்கப்பட்ட பெயர்களைத் தருக.

A - புத்சரண இலக்கியம்

B - சிங்கள உம்மக்க ஜாதக நூல்

C - கல்வெட்டு *(03 புள்ளிகள்)*

(ii) எலகரக் கால்வாய் மூலம் நீர்ப்பாசன வசதி பெற்ற நான்கு குளங்களைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) புராதன சமூகத்தில் காணப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான இரண்டு விடயங்களை குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) முற்காலத்தில் இலங்கையில் இனங்களுக்கு இடையே இணக்கப்பாடு காணப்பட்டமையை மூன்று உதாரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

6. (i) புராதன காலத்தில் பாரிய குளங்கள் அமைக்கப்பட்டமைக்கான மூன்று நோக்கங்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) அநுராதபுர யுகத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் நான்கைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) கீழே A, B எனத் தரப்பட்ட குளத்தின் உறுப்புக்களின் தொழிற்பாட்டினை விளக்குக.

A - குளக்கட்டு

B - கலிங்கல் தொட்டி *(05 புள்ளிகள்)*

(iv) இலங்கை ஆட்சியாளர்கள் முறையான சுகாதார சேவையை வழங்கியமைக்கான ஆதாரங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

7. (i) கீழே A, B, C எனத் தரப்பட்டுள்ள வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட வரிகளை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - குளங்களில் இருந்து நீரைப் பயன்படுத்துவோரிடம் அறவிடப்பட்ட வரி

B - அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காக செலுத்தப்பட்ட வரி

C - வாய்க்கால்களில் மீன் பிடிப்பதற்காக செலுத்தப்பட்ட வரி

(03 புள்ளிகள்)

(ii) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள சட்டங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களைத் தருக.

A - குளங்களில் இருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தல் ஆகாது.


B - நீர் நிலைகளில் வாழும் பறவைகளை கொல்லக் கூடாது.


C - காட்டு மரங்களை வெட்டக் கூடாது

D - மரங் செடி முகாமைத்தவத்தில் அரசினால் அமுல் செய்யப்பட்டுள்ள சட்டங்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். *(04 புள்ளிகள்)*

(iii) ரூவன்வெலிசாயா விகாரையை அமைப்பதில் பின்பற்றப்பட்ட தொழில்நுட்பமுறைகள் இரண்டினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) வசப மன்னனின் மூன்று பணிகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*


N


N
අප්‍රිකාව
ආபிரிக்கா
Africa
ඉන්දියන් සාගරය
இந்து சமுத்திரம்
Indian Ocean